

தலைமைச் செயலகத்தில் நேற்று (30.07.2024) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட 13 மாவட்டங்களில் நடைபெற்று வரும் வெள்ளத் தடுப்பு பணிகள் மற்றும் தூர்வாரும் பணிகள்குறித்து மண்டல பொறியாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், கூடுதல் செயலாளர் திருமதி எஸ். மலர்விழி, முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் அனைத்து மண்டல பொறியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று (30.07.2024) சிங்கப்பூர் மெரினா நீர் தேக்கத்தை ஒட்டி 260 ஏக்கரில் அமைந்துள்ள "தி கார்டன்ஸ் பை தி பே பூங்காவில் உள்ள மூன்று நீர்முனை தோட்டங்களான பே சவுத் கார்டன், பே ஈஸ்ட் கார்டன் மற்றும் டே சென்ட்ரல் கார்டன் ஆகியவற்றை பார்வையிட்டு அதன் சிறப்பம்சங்கள் குறித்து அங்குள்ள அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும், பே சவுத் கார்டனில் 130 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மலர் குவி மாடமான உலகின் மிகப்பெரிய கண்ணாடி பசுமை இல்லத்தையும் பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது, தமிழ்நாடு அரசு வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, கார்டன்ஸ் பை த பே பூங்காவின் மூத்த இயக்குநர் தினேஷ் நாயுடு மற்றும் அலுவலர் செல்வி வன்ரூ மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### விமான நிலைய விபத்துகள் குறித்து

# ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 31

டெல்லி விமான நிலையத்தில் கூரை இடிந்து விழுந்ததுபோல், குவஹாத்தி, ராஜ்கோட் மற்றும் ஜபல்பூர் போன்ற இடங்களில் செயல்பட்டு வரும் விமான நிலையங்களிலும் விபத்துகள் நிகழ்ந்த நிலையில், ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என நாடாளுமன்றத்தில் ஒன்றிய விமான போக்குவரத்துத் துறை அமைச்சகத்திடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவர் தயாநிதி மாறன் எம்.பி கேள்வி எழுப்பினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு :

★ நாட்டின் பல்வேறு விமான நிலையங்களில், குறிப்பாக டெல்லி, குவஹாத்தி, ராஜ்கோட் மற்றும் ஜபல்பூர் ஆகிய இடங்களில் மேற்கூரை இடிந்து விழுந்த சம்பவங்கள் குறித்து அரசு அறிந்திருக்கிறதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

★ சம்பவங்களில் பதிவான இறப்புகள் மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை விவரங்கள் என்ன?

★ காயமடைந்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கம் ஏதேனும் நிதி இழப்பீடு வழங்கியுள்ளதா மற்றும் அப்படியானால், கடந்த ஐந்தாண்டுகளில் இதுபோன்ற ஒவ்வொரு சம்பவத்திற்கும் வழங்கப்பட்டுள்ள இழப்பீடு நிதியின் விவரங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.

★ இந்த விபத்துகள் குறித்து அரசாங்கம் ஏதேனும் விசாரணையைத் தொடங்கியுள்ளதா மற்றும் அப்படியானால், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்கள் என்ன?

★ மக்களின் பாதுகாப்பிற்காக நாடு முழுவதும் உள்ள அனைத்து விமான நிலையங்களையும் ஆய்வு செய்ய அரசாங்கம் முன்மொழிகிறதா மற்றும் இது போன்ற விபத்துகள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதிசெய்ய மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளும் அதன் விவரங்களும் என்ன என கேள்வி எழுப்பினார்.

★ ஒப்பந்ததாரர்களுக்கு என்ஓசி/சிசி வழங்குவதற்கு முன்பு முறையான தணிக்கை/ஆய்வுகள் செய்துவரப்படவில்லை என்பது உண்மையா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன ?

★ பாதிக்கப்பட்ட விமான நிலையங்களில் அடையாளம் காணப்பட்ட கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

★ கடந்த ஐந்தாண்டுகளில் அனைத்து விமான நிலையங்களுக்களில் நடைபெற்ற பணியின் ஆய்வுகள் ஏதேனும் தொடங்கப்பட்டுள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

இவ்வாறு கேள்விகளை எழுப்பினார்.

### சிங்கப்பூரில் விரிகுடாவின் தோட்டங்கள் – பூங்காக்கள்

# மூன்று நீர்முனைத் தோட்டங்கள் - கட்டிடத் தொழில் நுட்பப் பணிகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பார்வையிட்டார்!

சிங்கப்பூர், ஜூலை 31 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப வேளாண்மை - உழவர் நலத்துறையின் சார்பாக மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டுப் பணிகள் தொடர்பான ஆய்வுகள், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது போன்ற பணிகளுக்காக அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அரசுமுறைப் பயணமாகச் சென்றுள்ளது. இந்தக் குழுவில் வேளாண்மை - உழவர் நலத்துறை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர் செல்வி அபூர்வா, உள்ளிட்ட உயர் அலுவலர்கள் உடன் சென்றனர்.

இந்த அரசுமுறைப் பயணத்தின் ஒரு அங்கமாக நேற்று (30.07.2024) சிங்கப்பூர் நகரில் மெரினா நீர்த்தேக்கத்தை ஒட்டி 260 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள விரிகுடாவின் தோட்டங்கள் (தி கார்டன்ஸ் பை தி பே) என்ற பூங்காவினை வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் பார்வையிட்டார்.

இந்தப் பூங்காவில் மெரினா தெற்கில் உள்ள பே சவுத் கார்டன், மெரினா கிழக்கில் நிறுவனர்களின் நினைவகத்துடன் கூடிய பே ஈஸ்ட் கார்டன் மற்றும் டவுன்டவுன் கோர் (Down Town Core) மற்றும் கல்லாங்கில் உள்ள பே சென்டரல் கார்டன் ஆகிய மூன்று நீர்முனைத் தோட்டங்களைப் பார்வையிட்டு அதன் சிறப்பம்சங்களை அங்குள்ள அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், 130 ஏக்கர் பரப்பளவில் உள்ள பே சவுத் கார்டனில் அமைந்துள்ள மலர் குவி மாடமான (Flower Dome) உலகின் மிகப்பெரிய கண்ணாடி பசுமை இல்லத்தையும் பார்வையிட்டனர்.

இப்பூங்காவிலுள்ள அதிக ஆற்றல், பயன்பாட்டுத்திறன் கொண்ட கட்டடத் தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்தும் கண்ணாடி வீட்டினையும் (conservatory) வானிலைக் கல்விக்கான விரிவாக்க மையத்தினையும் பார்வையிட்டார்.

தமிழக நகரங்களில் பசுமையான சூழல் மற்றும் தாவர இனங்களை மேம்படுத்துவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டத்தினைச் செயல்படுத்த இந்தப் பயணம் உறுதுணையாக அமையும். இந்த நிகழ்வின் போது தி கார்டன்ஸ் பை த பேவின் மூத்த இயக்குநர் திரு. தினேஷ் நாயுடு மற்றும் அலுவலர் செல்வி. வன்ரூ ஆகியோர் உடனிருந்தனர்.

சிங்கப்பூர் பூங்காவில் பின்பற்றப்படும், அதிக ஆற்றல், பயன்பாட்டுத்திறன் கொண்ட கட்டடத் தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்தும் கண்ணாடி வீட்டினையும் (conservatory) வானிலைக் கல்விக்கான விரிவாக்க மையம் தொடர்பான சிறப்பம்சங்களை தமிழ்நாட்டில் உள்ள பூங்காக்களில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ‘தமிழால் நாங்கள் உயர்ந்தோம்!’

# ‘தமிழால் மட்டுமே உயர்ந்தோம்! - என வாழ்ந்து காட்டுங்கள்!

## கல்லூரி மாணவர்களுக்கான – ‘தமிழால் முடியும்’ வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சியைத் தொடங்கி வைத்து – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேச்சு!

சென்னை, ஜூலை 31 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (30.07.2024) கல்லூரி மாணவர்களுக்கான தமிழால் முடியும்! வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சியை தொடங்கி வைத்து, உரையாற்றினார். இதில் ‘தமிழால் நாங்கள் உயர்ந்தோம்!’ ‘தமிழால் மட்டுமே உயர்ந்தோம்!’ என வாழ்ந்து காட்டுங்கள்! - என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசியதாவது :-

இன்றைக்கு இந்த சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியில் அதுவும் குறிப்பாக நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் இன்றைக்கு வாழ்க்கை வழிகாட்டி பயிற்சியாக தமிழால் முடியும் என்கின்ற தலைப்பில் துவங்கிக் கொண்டிருக்கின்ற இந்த சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுத்தி தந்திருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியையும், தொகுதி மக்களுக்கு நன்றியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

“மொழி என்பது ஒரு வைரம். பட்டை தீட்டத் தீட்ட அதனிடமிருந்து கோடிக்கணக்கான ஒளி மணிகள் வெளிப்படும்” என்று ஆங்கில அறிஞர் கூறியதை முத்தமிழறிஞர் கலைஞர் அய்யா அவர்கள் தான் பேசும்போது பட்டமளிப்பு விழாக்கள் தோறும் சொல்வது மாணவர்கள் தான் நம் நாட்டின் கண்மணிகள் என்பார்கள். அவர்களால் தான் நம்முடைய வருங்காலம் வைரம் போல் மின்னுகின்ற பொற்காலம் என்று குறிப்பிடுவதைப் போல நான் இங்கு பெருமிதமாக உங்களை மாணவ மணிகளே, வைர மணிகளே என்று அழைக்க விரும்புகிறேன்.

இனிதினும் இனிதான அமுதத்தேன் நம் தாய் மொழி தமிழ். அத்தமிழ் மொழியின் மேம்பட்ட வளர்ச்சிக்குப் பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து செய்து வருகிறது.

உலகத்தின் மூத்த மொழியாம் தமிழ்மொழியை உயர்த்திடப் பாடுபட்ட தமிழறிஞர் களுக்கு விருது வழங்குதல், தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையர் களுக்கு நூலுரிமைத் தொகை வழங்குதல், அயலகப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகளைத் தோற்றுவித்தல், மாணவர்களிடம் தமிழ் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் திருக்குறள் முற்றோதல், தமிழ்க் கூடல், தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு, தீராக்காதல் திருக்குறள் திட்டம், தமிழ் பரப்புரைக் கழகத்தின் வாயிலாக அயல்நாடு மற்றும் வெளி மாநில தமிழர்களுக்குத் தமிழ்க் கற்பித்தல், எழுத்தாளர்களுக்குக் ‘கனவு இல்லம்’ வழங்குதல், வீடு வழங்கக்கூடிய திட்டம், உலகெங்கிலும் வாழும் தமிழர்களை ஒருங்கிணைக்கும் வகையில், ஜனவரி 12ஆம் நாளை அயலகத் தமிழர் தின விழா கொண்டாடுகிற சூழ்நிலை, ஜூலை 18ஆம் நாளினை பேரறிஞர் அண்ணா அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி “மெட்ராஸ் மாகாணம்” என்று இருந்ததை “தமிழ்நாடு” என்று பெயர் வைத்த நாளை இன்றைக்கு “தமிழ்நாடு நாள்” விழாவாக ஜூலை 18 ஆம் நாளை நாம் கொண்டாடுகிறோம். கடந்த வாரம் காஞ்சிபுரத்தில் இந்த நிகழ்ச்சி மூன்றாம் ஆண்டாக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் இன்றைக்கு கொண்டாடப்பட்டு வருவதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடல்!**

மாநில அரசின் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலுக்கு உரிய அங்கீகாரம் அளித்து, அரசாணை வெளியிட்டமை தொடங்கி, அண்மையில் தமிழ்நாடு வணிகர்கள் நல வாரிய கூட்டத்தில், “தமிழ்நாட்டின் வீதிகளில் தமிழைக் காணவில்லை என யாரும் சொல்லக் கூடாது என வணிக நிறுவனங்கள் தமிழில் பெயர்ப் பலகை வைக்க முன்வர வேண்டும்” என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியதை நீங்கள் பத்திரிகைகளில் கூட பார்த்திருப்பீர்கள். அதற்காக இந்த நேரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்மையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தஞ்சைத் தரணியில் தமிழுக்கென தனிநிலையாக உருவாக்கப்பெற்ற தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கழக அரசின் பெருமுயற்சியால் ஒய்வுபெற்ற கல்வி நிலை மற்றும் அலுவல் நிலைப் பணியா ளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கென ரூபாய் 17 கோடியே 20 இலட்சத்து 28 ஆயிரம் வழங்கிட ஆணையிட்டார்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப் பெற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலங்களில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கென்று பேராசிரியர் ஒருவரை இயக்குநராக நியமிக்கின்ற மரபு கடைபிடிக்கப்பட்டு வந்தது. ஆனால் கடந்த காலத்தில் மாறிப்போன சூழ்நிலை ஏற்பட்டது. தற்போது கழக அரசால் மீண்டும் இயக்குநர் பதவிக்கு பேராசிரியர் நிலையில் நிரப்புவதென முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி இருக்கின்றார்கள்.

அதேபோல, முத்தமிழறிஞர் கலைஞர் அவகள் தமிழ்நாட்டு அரசின் முதலமைச்சராக முதன்முதலில் ஆட்சி பொறுப்பேற்ற போது தொடங்கப்பெற்ற தமிழ் வளர்ச்சித் துறையில் தற்போது முதுகலைத் தமிழ் இலக்கியம் படித்த மாணவர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழியாக நம்முடைய தமிழக அரசின் துணை இயக்குநர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் இன்றைக்கு 50 சதவீதம் தமிழ் படித்த மாணவர்களை நிரப்ப வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**கலைஞர் தமிழுக்கு அளித்த கொடை!**

அதேபோல, ஈராயிரம் ஆண்டுகளின் தொன்மையும் தொடர்ச்சியும் உடைய பேரினம் நம் தமிழினம். அத்தமிழினத்தின் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர் தமிழுக்கு அளித்த கொடைகள் பல. தனது மொழித்திறனால் எழுத்து, பேச்சு, பாடல் எனப் பல பரிமாணங்களில் தமிழ்மொழிக்கு வளம் சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அமைதிப் பூங்கா, அய்யன் திருவள்ளுவர், சிங்காரச் சென்னை, மாற்றுத் திறனாளி, திருநங்கை, கைம் பெண், மென்பொருள் பூங்கா என நூற்றுக்கணக்கான தனித்துவச் சொற்களைத் தமிழுக்கு ஈந்த அறிஞர் பெருமகனார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆவார்.

தமிழ்த் திருநாட்டின் வருங்கால எழுத்தாளர்களாக, பேச்சாளர்களாக மிளிர இருக்கும் மாணவச் செல்வங்களே நீங்கள் தவறாமல், அரசியல் விருப்பு வெறுப்பின்றி முத்தமிழறிஞர் கலைஞரின் எழுத்துகளைப் படியுங்கள்... ‘மானமிகு சுயமரியாதைக்காரன்’ எனப் பறைசாற்றிக் கொண்ட அந்த மாமனிதரின் எழுத்துகள் உங்கள் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை உண்டாக்கும் என்பதற்கு நான் உறுதியளிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

உலக அரங்கில் தனிப் பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கும் தமிழினம், உலகத்திற்கே வழிகாட்டும் சமூக நீதியை, அறச் சிந்தனையை, விருந்தோம்பலை, வீரத்தின் மாண்பை, நட்பின் இலக்கணத்தை, வாழ்வின் நெறியினைத் தந்த பெருமைக்குரியது.

அத்தகு தமிழினத்தின் பெயரையும் சேர்த்து, இத்திட்டத்தின் பெயரினை இனி வரும் காலங்களில், ‘தமிழால் முடியும்! தமிழரால் முடியும்!’ எனக் குறிப்பிடலாம் என்பதைப் பெருமிதத்தோடு இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற அய்யன் வள்ளுவனின் வழியில் சமூகநீதியால் தலைநிமிர்ந்து நிற்கும் தமிழினத்தின் இளம் பிள்ளைகள் நீங்கள் இந்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்தி ‘தமிழால் நாங்கள் உயர்ந்தோம்!’, ‘தமிழால் மட்டுமே உயர்ந்தோம்!’ என வாழ்ந்து காட்டுங்கள்! என வாழ்த்து கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசினார்.




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் நேற்று (30.07.2024) சென்னை மாநில செய்தி நிலையக் கூட்டரங்கில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய மண்டல இணை இயக்குநர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், மற்றும் செய்தித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் மாவட்டத்தில் 2 திருக்கோயில்களுக்குச் சொந்தமான

# ரூ. 67.41 கோடி மதிப்பீட்டிலான நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு!

## இந்து சமய அறநிலையத்துறை துரித நடவடிக்கை!

சென்னை, ஜூலை 31-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின்பகட்டுப்பாட்டிலுள்ளததிருக்கோயில்களுக்குச்hசொந்தமானhசொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் திருவாரூர் மாவட்டத்தில் 2 திருக்கோயில்களுக்குச் சொந்தமான ரூ.67.41 கோடி மதிப்பிலான நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டம், திருவாரூர், விஜயபுரம், ரேணுகாதேவி அம்மன் திருக்கோயிலுடன் இணைந்த குழுக்கோயிலான ஐநூற்று பிள்ளையார் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ. 14.11 கோடி மதிப்பிலான 35,276 சதுரடி மனை ஆக்கிரமிப்பிலிருந்தது கண்டறியப்பட்டது. மேலும், மற்றொரு குழுக்கோயிலான கபிலேஷ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.53.30 கோடி மதிப்பிலான 1,33,252 சதுரடி நஞ்சை நிலம் இரண்டு நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்த நிலையில், நீர்பாசன வசதியில்லாத காரணத்தினால் சாகுபடி செய்யப்படாமல் தரிசாக இருந்தது. இந்நிலையில் நாகபட்டினம் மண்டல இணை ஆணையர் நீதிமன்ற உத்தரவின்படி சட்டப்பிரிவு 78ன் கீழ் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட நிலங்களின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.67.41 கோடியாகும்.

இந்நிகழ்வுகளின்போது இந்து சமய அறநிலையத் துறை துணை ஆணையர் உதவி ஆணையர் (கூ. பொ.) ஆர்.ராமு, வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) திருமதி லட்சுமி பிரபா, திருக்கோயில் செயல் அலுவலர் செ.சண்முகராஜ், ஆய்வாளர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டமான மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சி திருவள்ளூர் தொகுதி திருவாலங்காடு கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட இலட்சுமிவிலாசபுரம், ஒரத்தூர், பாகசாலை, சின்னமண்டலி, களாம்பாக்கம், குப்பம் கண்டிகை, பெரிய களக்காட்டூர், அரிச்சந்திராபுரம், தொழுதாவூர், சின்னம்மாபேட்டை ஆகிய ஊராட்சிகளுக்காக சின்னம்மா பேட்டையில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபு சங்கர் ஐ.ஏ.எஸ்., தலைமையில் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அரசு துறைகளின் மாவட்ட, ஒன்றிய அளவிலான அலுவலர்கள், திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.மகாலிங்கம், ஒன்றிய குழு துணைத் தலைவர் சுஜாதா மகாலிங்கம், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் விஜயகுமாரி சரவணன், மாவட்ட துணை செயலாளர் சி.ஜெயபாரதி, ஒன்றிய குழு உறுப்பினர் டி.நந்தகுமார், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் களாம்பாக்கம் எம். பன்னீர்செல்வம், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.ராஜா, ஒன்றிய நிர்வாகிகள் ஜி.ரமேஷ், த.ஜீவஞானப்பிரகாசம், சண்முகம், நீலாவதி சீனிவாசன் உள்ளிட்ட ஏராளமான கழகத் தோழர்கள், 500 – ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பங்கேற்ற பொதுமக்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.